Written by Administrator
Saturday, 15 August 2009 10:22 -

□□□□□□□□□□□13.08.2009

வறுமை ஒழிப்பு, மனித மேம்பாட்டுக்கு

கோவை உள்பட 5 மாநகராட்சிகளில் புதிய திட்டம் அறிமுகம்

ஆய்வறிக்கை தயாரிக்க அரசு நிதி ஒதுக்கீடு

கோவை,ஆக.13- தமிழகத்தில் கோவை உள்பட 5 மாநகராட்சிகளில் வறுமையை ஒழிக்கவும், மனித வளத்தை மேம்படுத்தவும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்காக ஆய்வறிக்கை தயாரிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது.

5 மாநகராட்சிகள் தேர்வு

தமிழகத்தில் தற்போது உள்ள மாநகராட்சிகளான, சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய 5 மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன.

இதற்கான உத்தரவை நகராட்சி நிர்வாக துறை செயலாளர் திருஞானமூர்த்தி பிறப்பித்து உள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ரூ.25 லட்சம் ஒதுக்கீடு

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மனிதவள மேம்பாடு, சமூக மேம்பாடு, பெண்கள் குழுக்களுக்கான அதிகாரத்தை முழுமையாக இடைக்கச்செய்தல், நகரங்களில் எளியவர்களின் நிலைமையை கண்டறிந்து அவற்றை போக்குதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒரு நடவடிக்கையாக கோவை,மதுரை,திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளுக்கு ரூ.25 லட்சம் ஒதுக்கீடு செய்து ஆய்வறிக்கை தயாரிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த திட்டம் பற்றிய மிக நேர்த்தியான பார்வையை பெறவும் இந்த நிதியை ஒதுக்க அரசு உத்தரவு செய்து உள்ளது. அதனால் 5 மாநகராட்சிகளிலும் மனித மேம்பாடு குறித்த ஆய்வறிக்கை சிறப்பாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது. இந்த புதிய திட்டம் பற்றி கோவை மாநகராட்சி ஆணையாளர் அண்ணாதுரையிடம் கேட்டபோது, "ஆரம்பற்ற உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்கனவே மனித மேம்பாடு திட்டம் நடைமுறையில் உள்ளது. இது தீவிர போதுமானதாகவே இருக்கிறது. இதற்கு ஒரு தனியான அறிக்கையை அரசு திட்டமாக்கப்பட்டு உள்ளது. மாநகராட்சி பகுதிகளில் உள்ள ஏழை, எளிய மக்கள், அவர்களின் வாழ்வாதாரங்கள் அனைத்து சதவீத அடிப்படையில் வழங்க வேண்டிய நடவடிக்கைகள், அந்த எல்லையை தேவை என உள்ளன? என்பன போன்ற தகவல்களை இரண்டு வதற்காக கோவை மாநகராட்சிக்கு ரூ.5 லட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது என்றார்.